# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXXI YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 MARCH No. 03


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 4:1-8

1. என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.
2. மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப்படுத்தி, வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள். (சேலா)
3. பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.
4. நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். (சேலா)
5. நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.
6. எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிறவர்கள் அநேகர்; கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.
7. அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிறகாலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்.
8. சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரைசெய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்.

## தேவபிரசன்னத்தில் உங்களுக்கு உன்னத பெலன் கிடைக்கும்!

## YOU WILL HAVE BLESSED PEACE IN GOD'S PRESENCE!

சகோதரி ஏஞ்சலின்



நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில், **அழைப்பின் எதிரொலி** குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்! கிறிஸ்துவுக்குள் உங்கள் ஆத்துமா செழித்திருப்பதுபோலவே, நீங்கள் ஒவ்வொருவரும் எல்லா வகையிலும் தொடர்ந்து செழித்து வாழ வேண்டும் என்பதே என் மனமார்ந்த ஜெபம்.

இந்த மாதம் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் வேளையில், நமது அன்பான பெண் வாசகிகள் அனைவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், புதுப்பிக்கப்பட்ட பெலத்துடனும், ஏராளமான கிருபையுடனும் வாழ வாழ்த்துகிறேன். தேவனுடைய அன்பை மிகவும் அவசியமாகக் கொண்டிருக்கும் இந்த உலகில், தங்கள் வீடுகளைக் கட்டி, தங்கள் குடும்பங்களைப் பேணி வளர்த்து, ஒளியாகப் பிரகாசிக்கும், அவருடைய வார்த்தையில் சித்தரிக்கப்பட்டுள்ள ஞானமுள்ள பெண்களாக நாம் மாறுவதற்கு தேவன் தொடர்ந்து நமக்கு உதவுவார் என்பதே என் ஜெபம். நாம் ஞானத்துடன் நடந்து கண்ணியத்தையும், பெலத்தையும் அணிந்து, நாம் செய்யும் எல்லாவற்றிலும் இயேசு கிறிஸ்துவின் அழகைப் பிரதிபலிப்போம்.

### ஓய்வின் பரிசு: நம் வாழ்விற்கான தேவனுடைய திட்டம்!

பெண்களின் பன்முகத் திறனைப் பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, என் எண்ணங்கள் என் தாயையும், பாட்டியையும் நோக்கித் திரும்பின. அவர்கள் இருவரும் தங்கள்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு மொழிகளில்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு - காலை 8.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள்! பிறருக்கும் Share பண்ணுங்கள் !!

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)

Estd. 1969



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
Ex MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.
EDITOR, PUBLISHER & PRINTER

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call

**உத்தமமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது; நான் உமக்குக் காத்திருக்கிறேன்**

**சங்கீதம் 25:21**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமான நண்பர்களே!

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபையாக நமக்கு உதவியுள்ளார். கடந்த மாதங்கள் கடினமானதாகவும், சவாலானதாகவும் இருந்த போதிலும், கர்த்தருடைய கிருபை எப்போதும் நமக்கு போதுமானதாக இருந்தது; அது இன்றும் தொடர்கிறது.

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் அடங்கிய ஒரு குழுவைத் தந்து கர்த்தர் ஆசீர்வதித்துள்ளார். பள்ளியின் 28–வது ஆண்டு விளையாட்டு விழாவை 2026 ஜனவரி 30ஆம் தேதி அன்று மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடினோம்.




**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி விளையாட்டு விழா**

நமது பள்ளி செயலாளரான டாக்டர் P.E.R. பிரேம்சந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். மேலும், அன்றைய நாள் முழுவதும் உற்சாகமான விளையாட்டு நிகழ்வுகளால் நிரம்பியிருந்தது. பெற்றோர்கள் எங்களுடன் இணைந்து, பிள்ளைகள் தங்கள் சிறப்பான திறமையையும், ஒழுங்குமுறையையும் வெளிப்படுத்தியபோது அவர்களை ஊக்குவித்து மகிழ்ந்தனர்.

நம் நாட்டிற்கும், உலகிற்கும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்க எங்களுக்கு உதவியதற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறோம். நமது மாணவர்கள் இப்போது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் அரசுத் தேர்வுக்குத் தயாராகி வருகின்றனர். அவர்களுக்காக ஜெபியுங்கள். நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** மேலும் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களையும், பணியாளர்களையும் வழங்குமாறு உங்கள் ஜெபங்களில் வேண்டிக்கொள்ள தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.



**நமது தலைமைச் சபையின் ஆண்களுக்கான தியான முகாம் – யோசுவா செயல்வீரர்கள் ((Joshua Warriors))**

**யோசுவா செயல்வீரர்கள் (Joshua Warriors)** சார்பாக நமது தலைமைச் சபையின் ஆண்களுக்கென்று அற்புதமான ஒருநாள் தியான முகாமை மகாபலிபுரத்தில், கடந்த ஜனவரி 26ஆம் தேதி அன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமில் சுமார் 70 அர்ப்பணிப்புள்ள சகோதரர்கள் கலந்து கொண்டார்கள். கலந்து கொண்ட அனைவரும் தேவனுடைய வல்லமையையும் ஒரு விசேஷித்த தொடுதலையும் அனுபவித்தனர்.

கர்த்தர் தேவ செய்தியாளர்களையும் பெரிதும் ஆசீர்வதித்தார். மேலும் கலந்து கொண்ட அனைவரும் இந்திய மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க புதிய தரிசனத்துடனும் அர்பணிப்புடனும் புறப்பட்டனர்.

இதுபோன்ற ஒரு சிறப்பு குடும்ப முகாமை விரைவில் ஏற்பாடு செய்ய நாங்கள் திட்டமிட்டுள்ளோம். சரியான நேரம், இடம் மற்றும் தேவ செய்தியாளர்கள் குறித்து தேவனுடைய வழிகாட்டுதலுக்காக ஜெபிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

## நமது இதர ஊழியங்கள்

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** மற்றும் நமது மாதாந்திர பத்திரிகைகள் உட்பட அனைத்து ஊழியங்களுக்கும் கர்த்தர் தொடர்ந்து கிருபையுள்ளவராக இருக்கிறார்.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்கான** அடுத்த பட்டமளிப்பு விழா இவ்வாண்டு 2026 ஜூலை 4ஆம் தேதி திட்டமிடப்பட்டுள்ளது. வரும் 2026–2027 கல்வி ஆண்டிற்கான வகுப்புகள் 2026 ஆம் ஆண்டு ஜூன் முதல் வாரத்தில் தொடங்கும்.

நமது கல்லூரிகளுக்கு அர்ப்பணிப்புள்ள புதிய மாணவர்களை கர்த்தர் அனுப்பும்படி ஜெபியுங்கள். நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளில்** கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:

- இறையியல் பட்டயப்படிப்பு (Dip.Th)
- இளங்கலை இறையியல் படிப்பு (B.Th)

இப்பாடத்திட்டங்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் கற்பிக்கப்படுகின்றன. நமது அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்காகவும் உங்கள் ஜெபங்களைக் கோருகிறோம். நமது இந்தி வேதாகமக் கல்லூரிக்கும் தரமான மாணவர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

ஊழியக் களப்பணியிடங்களிலும், நிர்வாகத் துறைகளிலும் பணிபுரியும் நமது ஊழியர்கள் அனைவருக்காகவும் தேவனுக்கு நன்றி கூறுகிறோம்.

நாங்கள் உங்களுக்காகத் தொடர்ந்து ஜெபிக்கிறோம். நீங்களும் நமது ஊழியங்களை தொடர்ந்து உங்கள் ஜெபங்களாலும், உதவிகளாலும் தாங்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவனுடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் சகோதரரான,**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

குடும்பங்களையும், என் தந்தையின் ஊழியங்களையும் தாங்குவதற்காக, இடைவிடாமல் அயராது உழைத்த குறிப்பிடத்தக்க பெண்மணிகளாவர். அவர்களின் அர்ப்பணிப்பு என்னை ஒரு ஆழமான உணர்த்துதலுக்கு வழிவகுத்தது. ஓய்வு என்பது மிகவும் இன்றியமையாதது.

நான் பெண்களைப் பற்றி முதன்மையாகப் பேசினாலும், ஆண்களும் ஓய்வு என்ற கருத்துடன் போராடுகிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களுக்குத் தேவையானவற்றை வழங்குவதற்காக, வேலையையும் வீட்டுப் பொறுப்புகளையும் சமாளித்துக் கொண்டு விடாமுயற்சியுடன் உழைக்கிறார்கள். இன்றைய வேகமான, பரபரப்பான உலகில், ஓய்வு என்பது யாராலும் பெற முடியாத ஒரு ஆடம்பரமாகத் தெரிகிறது. நம் குழந்தைகளும்கூட பள்ளிப் பாடங்கள், கூடுதல் வகுப்புகள் மற்றும் தொடர்ச்சியான தேர்வுகளால் திணறடிக்கப்படுகிறார்கள்.

இருப்பினும், வேதாகமம் ஒரு சக்தி வாய்ந்த உண்மையை வெளிப்படுத்துகிறது:

ஆறு நாட்கள் சிருஷ்டிப்புக்குப் பிறகு, **தேவனே ஏழாம் நாளில் ஓய்வெடுத்தார்**. (ஆதியாகமம் 2:2). பிரபஞ்சத்தின் சிருஷ்டி கர்த்தாவே ஓய்வைத் தேர்ந்தெடுத்தால், நமக்கு அது எவ்வளவு அதிகமாகத் தேவைப்படும்? ஆனாலும், நம்மில் பலருக்கும் ஒருநாளில் போதுமான நேரமில்லை என்று தோன்றுகிறது. வீடு, வேலை மற்றும் ஊழியம் ஆகியவற்றின் தேவைகள் இடைவிடாததாக உணரப்படலாம். தேவன்

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

**Statement about ownership and other particulars about the Newspaper Echo of His Call (Tamil) - Form IV**
**(See Rule 8)**

| | |
|---|---|
| 1. Place of Publication | : **New No. 8 & 10, Old No. 18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai - 600 005.** |
| 2. Periodicity | : **Monthly** |
| 3. Printer, Editor, Owner & Publisher | : **S. Sam Selva Raj** (Same Address) |
| 4. Nationality | : **Indian** |

I, **S. Sam Selva Raj** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**March 2026** **S. Sam Selva Raj.**

ஓய்வெடுப்பது எளிது; அவர் தேவன்! என் வேலை ஒருபோதும் முடிவதில்லை என்று மக்கள் சொல்வதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன்.

அந்த உணர்வு புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தாலும், தேவன் ஓய்வை நமது மனித வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாக வடிவமைத்துள்ளார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

காலப்போக்கில், நாம் அவருடைய வடிவமைப்பிலிருந்து விலகிச் சென்று விட்டோம். இன்று, வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கும்போது, நாம் தூக்கத்தைத் தியாகம் செய்கிறோம், உணவைத் தவிர்க்கிறோம் மற்றும் Run around like a headless chicken என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் தலையில்லாத கோழிகளைப் போல நம்மை நாமே வருத்திக் கொள்கிறோம். ஆனால், தேவனுடைய வார்த்தை நம்மை அவருடைய கிருபையின் தாளத்திற்குத் திரும்ப அழைக்கிறது.

ஓய்வு என்பது சோம்பல் அல்ல; அது கீழ்ப்படிதல். அது, "ஆண்டவரே, நான் நிறுத்தும்போதும் கூட, நீரே எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறீர் என்று நான் நம்புகிறேன்" என்று சொல்லும் ஒரு நம்பிக்கையின் செயல். ஓய்வைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதையும், அதை ஏற்றுக் கொள்வதில் நாம் ஏன் அடிக்கடி சிரமப்படுகிறோம் என்பதையும் ஆராய்வோம். நாம் இடைநிறுத்தவும், சுவாசிக்கவும், அவருடைய பிரசன்னத்தில் புத்துணர்ச்சி பெறவும் கற்றுக் கொள்வோமாக! – ஏனெனில், **அவரிடத்தில்தான் நம் ஆத்துமாக்களுக்கு உண்மையான இளைப்பாறுதலைக் காண்கிறோம்.** (மத்தேயு 11:28).

## ஓய்வின் சக்தி!

### 1. ஓய்வு என்பது நம் வாழ்விற்கு தேவன் ஏற்படுத்திய வழக்கம்!

**தேவன்தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ....... அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்**... ஆதியாகமம் 2:2–3.

தேவன் ஓய்வுநாளை ஒரு பரிசாகப் படைத்தார். ஓய்வு என்பது ஒரு ஆராதனைச் செயல்; அவரிடம் நெருங்கிச் செல்லவும், அவருடைய வார்த்தையைப் படிக்கவும், தியானிக்கவும், ஜெபிக்கவும், அவருடைய பிரசன்னத்தை அனுபவிக்கவும் ஒரு புனிதமான நாள். நாம் அவரில் இளைப்பாறும்போது, உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், உணர்ச்சிரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் புத்துணர்ச்சி பெறுகிறோம்.

நாம் ஓய்வைப் புறக்கணித்தால், சோர்வு தவிர்க்க முடியாததாகிவிடும். தேவன் சோர்வு காரணமாக ஓய்வெடுக்கவில்லை. அதற்கான முன்மாதிரியாக இருக்கவில்லை. மாறாக, நாம் பின்பற்றுவதற்காக ஒரு வழக்கத்தை ஏற்படுத்தவே அவ்வாறு செய்தார். ஓய்வு என்பது ஒரு விருப்பத்தேர்வு அல்ல; அது வாழ்க்கைக்கான தேவனுடைய தெய்வீக வடிவமைப்பின் ஒரு பகுதியாகும்.

### 2. ஓய்வு என்பது மீண்டு வருவதல்ல, அது ஒரு ஆயத்தம் ஆகும்!

ஓய்வு புறக்கணிக்கப்படும்போது, அது புத்துணர்வுடன் நடைமுறைப்படுத்தப்படும் ஒன்றாக இல்லாமல், சோர்விலிருந்து மீள்வதற்கான மிகுந்த ஏக்கம் நிறைந்த ஒரு முயற்சியாக மாறிவிடுகிறது. இயேசு கிறிஸ்து இந்தக் கொள்கையைத் தெளிவாகப் புரிந்து கொண்டார். ஊழியத்தின் தேவைகளால் அவர் மூழ்கடிக்கப்படுவதற்கு முன்பு, அவர் அடிக்கடி தனிமையான இடங்களுக்குச் சென்று ஜெபித்தார்:

**அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார்.** மாற்கு 1:35.

**அவரோ வனாந்தரத்தில் தனித்துப் போய், ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்..** லூக்கா 5:16.

பிதாவுடன் இயேசு கிறிஸ்து செலவிட்ட நேரம் திட்டமிட்டதாகவும், செயலூக்கமானதாகவும் இருந்தது. தேவனோடு வழக்கமாக ஐக்கியம் கொள்ளும்போது ஆவிக்குரிய பெலன் கிட்டுகிறது என்பதை அவர் அறிந்திருந்தார்.

## சோர்வு ஓய்வைப் புறக்கணிப்பதன் விளைவாகும்!

ஓய்வின்மை சோர்வுக்கு வழி வகுக்கிறது; இது இன்று நம்மில் பலர் எதிர்கொள்ளும் ஒரு போராட்டம். நாம் தேவனுடைய ஓய்வின் தாளத்தைப் புறக்கணிக்கும்போது, உடல்ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் சோர்வடைகிறோம். நாம் சோர்வடையும்போது, தேவனுடைய ராஜ்யத்தில் திறம்பட சேவை செய்ய முடியாது.

ஓய்வு என்பது சுயநலம் அல்ல; அது தேவன் நம்மிடம் ஒப்படைத்த நம் வாழ்வின் மற்றும் **அழைப்பின்** பொறுப்புணர்வாகும். சோர்வு ஒரே இரவில் ஏற்படுவதில்லை; தவறான முன்னுரிமைகள், தவறான அடையாளம் மற்றும் தவறான சமுதாயம் நம் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த நாம் அனுமதிக்கும்போது அது மெதுவாகப் பற்றிக் கொள்கிறது. இந்தத் துறைகளை நாம் ஆராய்ந்து, தேவன் நம்மை எப்படி அன்புடன் அழைக்கிறார் என்பதைப் பார்ப்போம். புதுப்பித்தலுக்கான அவருடைய திட்டத்திற்குத் திரும்புவோம்.

### 1. தவறான முன்னுரிமைகள்!

நம்மால் முடிந்ததைவிட அதிகமாகக் கையாள எடுத்துக் கொள்ளும்போது சோர்வு நம்மைத் தாக்குகிறது. அனைத்துமே முக்கியமாகத் தோன்றுவதால், நாம் எல்லாவற்றிற்கும் சரி என்று சொல்கிறோம். இருப்பினும் ஞானம் நமக்கு முன்னுரிமை அளிக்கக் கற்றுக் கொடுக்கிறது. 'வேண்டாம்', 'இல்லை' என்று சொல்லக் கற்றுக் கொள்வது சுயநலம் அல்ல; அது அவசியம்.

இயேசு கிறிஸ்துவும்கூட சமநிலையின் தேவையை உணர்ந்தார்:

**அவர் அவர்களை நோக்கி: வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம். வாருங்கள் என்றார். ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால்**

தொடர்ச்சி 7-ம் பக்கம்.....


## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்**. மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**Account Name** : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST
**Account Number** : 1023 2923 805
**Bank Name** : STATE BANK OF INDIA
**Branch** : TRIPLICANE, CHENNAI - 600 005
**IFSC Code** : SBIN 0000249
**SWIFT Code** : SBI NIN BB 455

ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2026 மார்ச் 19 முதல் 2026 ஏப்ரல் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

**மார்ச் 19** ⇨ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள், விண்ணப்ப பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருவதற்காக ...

**மார்ச் 20** ⇨ ஜனவரி 24–ம் தேதி மகாபலிபுரத்தில் நடைபெற்ற **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களுக்கான ஒருநாள் தியானமுகாமை ஆசீர்வதித்த கிருபைக்காக...

**மார்ச் 21** ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

**மார்ச் 22** ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக...

**மார்ச் 23** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ ஆசிரியைகள் மற்றும் பள்ளி முதல்வரை தந்து ஆசீர்வதித்த கிருபைக்காக...

**மார்ச் 24** ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...

**மார்ச் 25** ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும், அவர்களது குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

**மார்ச் 26** ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டினதற்காக ...

**மார்ச் 27** ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் அவர்களது குடும்பத்தினரை எல்லாவிதமான தீய வல்லமைகளுக்கும் விலக்கி காத்து வருவதற்காக...

**மார்ச் 28** ⇨ நமது **வேதாகமத் தபால்வழிக் கல்வி** மற்றும் **அஞ்சல்வழி இறையியல் கல்விகளை** ஆசீர்வதித்து வருவதற்காக ...

**மார்ச் 29** ⇨ அரசியல் மற்றும் மத எதிர்ப்புகள் மத்தியிலும் நமது கிறிஸ்தவ ஊழியங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கிருபைக்காக ...

**மார்ச் 30** ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்து வருவதற்காக ...

**மார்ச் 31** ⇨ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்து வருவதற்காக ...

**ஏப்ரல் 01** ⇨ கடந்த மாதத்தில் நமது தேவைகளை நிறைவாக்கிய கிருபைக்காக...

**ஏப்ரல் 02** ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளை** ஆசீர்வதித்து வருவதற்காக ...

**ஏப்ரல் 03** ⇨ ஜனவரி 26–ம் தேதி **யோசுவா செயல்வீரர்கள் (Joshua Warriors)** சார்பாக மகாபலிபுரத்தில் நடைபெற்ற தலைமைச் சபையின் ஆண்களுக்களுக்கான ஒருநாள் தியானமுகாமை ஆசீர்வதித்த கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

**ஏப்ரல் 04** ⇨ அனைத்து நாடுகளின் மத்தியிலும் நிலவிவரும் போர் பதட்டம் மற்றும் குழப்பங்கள் மத்தியில் தேவ பாதுகாப்பு கொடுப்பதற்காக வேண்டி...

**ஏப்ரல் 05** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** செயல்பாடுகளின் விஸ்தீரணத்திற்காகவும், அவை அனைவருக்கும் ஆசீர்வாதமாகவும், பயன்படும்படியும் இருக்க வேண்டி ......

**ஏப்ரல் 06** ⇨ பூமியில் தேவராஜ்யத்தை ஸ்தாபிக்க கர்த்தர் நமது ஊழியங்களுக்கு திரளான தரிசனங்களை வழங்க வேண்டி...

**ஏப்ரல் 07** ⇨ உலகத்தில் உள்ள ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்காக...

**ஏப்ரல் 08** ⇨ நமது ஜெப ஊழியத்தில் உதவி செய்பவர்களுக்காகவும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் அனைவருக்காகவும் ...

**ஏப்ரல் 09** ⇨ வைரஸ் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களுக்கு எதிராக பாதுகாப்பை வேண்டி ...

**ஏப்ரல் 10** ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

**ஏப்ரல் 11** ⇨ உலகத்திலுள்ள அனைத்து இளம்தலைமுறையினரும், குழந்தைகளும் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி...

**ஏப்ரல் 12** ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் அனைத்து நாடுகளும் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட ...

**ஏப்ரல் 13** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள், மற்றும் விண்ணப்ப பங்காளர்கள் அனைவர் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் கர்த்தரின் கருணை பொழியப்பட வேண்டி...

**ஏப்ரல் 14** ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி...

**ஏப்ரல் 15** ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

**ஏப்ரல் 16** ⇨ நமது ஊழியங்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டி...

**ஏப்ரல் 17** ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...

**ஏப்ரல் 18** ⇨ தேவனின் கிருபை மீண்டும் ஒருமுறை மக்களின்மேல் பொழியப்பட வேண்டி...

## கிறிஸ்தவர் இல்லையேல் உலகமும் இல்லை!

### கண்டுபிடிப்பாளர்கள்:

| | |
|---|---|
| Bi cycle | = Mac Milan. |
| Bike | = J. Dailer. |
| Auto | = Jonathan Scobie. |
| Car | = Carl Benz. |
| Motar Car | = Austin. |
| Jeep | = W. L. Zedson. |
| Bus | = Gold Vaas. |
| Aero Plane | = Wright Bros. |
| Rail | = Richard Trivitick. |
| Tractor | = John Froclich. |
| JCB | = Josep C Bamford. |
| Battery | = A. Wolt. |
| Electic | = Bejamin Franklin. |
| Bulb | = Thomas A Edison. |
| Dyanamo | = M Faraday. |
| Gas Engine | = Daimier. |
| Diseal Engine | = R Diseal. |
| Welder | = Etish Thomson. |
| Railway Engine | = Stephen Son. |
| LPG Gas | = Dr.Walter DS |
| Mike | = Hores Short. |
| Pen | = Louis Warerman. |
| Iron Box | = HW Sule. |
| Matches | = John Walker. |
| Camera | = John Carbet. |
| Digital Camera | = Stevan. |
| Razor | = Kings J Gillette. |
| Rubber | = C Good Year. |
| Refrizarator | = James Harrison, Alexander Kytsin. |
| Saftey Pin | = Walter Hunt. |
| Sewing Machine | = Barthalome Tymoniv. |
| Lens | = Venis (Vincy). |
| Eye Glass | = Salvino D A. |
| T V | = Baird. John Logi. |
| Phone | = Grahambell A. |
| Computer | = Charles Babez. |
| Mobile | = Martin. Cooper. |
| SD Card | = Rolnd Moreno. |
| Paints | = Shalimar. |
| Steel | = Henry Besmar. |
| Cement | = Joesp Aspadin. |
| Tiles | = German Missionaries. |
| Tiolet | = Thomas Crapper. |
| Pant | = George Bryon. |
| Shirt | = Beyonce. |
| Jean Pant | = Jacob Devis. |
| Bra | = Marie Tucok. |
| Cricket | = WJ Grace. |
| Volley ball | = Morgan Willson. |
| Foot ball | = Robert Kane |
| Peniciline | = A Fleming. |
| Plastic Surgery | = Archibald. Hecter M |
| Polio | = Jonas Salk. |
| SmallPox | = Edward Jenner. |
| XRay | = Willhelm Ranjen. |
| Insulin | = Frederick Bantig. Charles H Best. |
| Quinine | = Pierra Joseph. |
| Stent Heart | = Julio Palmaz. |
| Plaster | = Paul Beiersdorf. |
| Anestetic | = William Marton. |
| Anthrox | = Louis Pasteur. |
| Antiseptic | = Joseph Lister. |
| Artificial Heart | = Denton Cooley. |
| Artificial Hip | = JohnCharnley. |
| Skin | = John F. Loannis. |
| Birth control pills | = Gregory Pincus. Min Chuch. |
| Blood Transfusion | = Thomas Bludell. |
| Contact Lens | = Adolf Fick. |
| Cough Drops | = James Smith. |
| Syringe | = Colin Murdoch. |

**கிறிஸ்தவம் உலகிற்கு எதுவும் செய்யவில்லை என்று கூறும் பிற சமூகத்தினருக்கு பதிலளிக்கும் வகையில் மேற்கூறியவை வெளியிடப்படுகிறது. யார் செய்தார்கள் யார் செய்யவில்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.**

**தனிமனிதன் மற்றும் உலகத்தின் கண்கள் கிறிஸ்துவின் வல்லமையைக் காண திறக்கப்படட்டும்!**

*************

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
Diploma in Theology &
Bachelor of Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும்!
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

**போஜனம் பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது.** மாற்கு 6:31.

லூக்கா 10–இல், இயேசு கிறிஸ்து மார்த்தாள் மற்றும் மரியாள் ஆகியோரின் வீட்டிற்குச் சென்றதைப் பார்க்கிறோம். மார்த்தாள் அவரையும் அவருடைய சீடர்களையும் அன்புடன் வரவேற்றாள். மேலும், தன் விருந்தினர்களைக் கவனித்துக் கொள்வதில் மும்முரமாக இருந்தாள்.

தேவாலயத்தில் பந்தி விசாரிப்புக்குக் குழுக்கள் இருந்தன. ஆனாலும், மார்த்தாள் அதிக வேலைப்பளுவால் சோர்வடைந்திருந்தபோது, மரியாள் இயேசு கிறிஸ்துவின் பாதத்தருகே அமர்ந்து அவருடைய வசனத்திற்கு செவிகொடுப்பதைத் தெரிந்தெடுத்தாள். அதற்கு, மார்த்தாளும் “சரி” என்று சொல்லியிருந்தாள். ஆனால், இப்போது அவள் தன் பொறுப்புகளின் பாரத்தால் போராடிக் கொண்டிருந்தாள். நம்மில் எத்தனை பேர் இதை உணர்ந்திருக்கிறோம்? நாம் நல்ல எண்ணத்துடன் ‘சரி’ என்று சொல்கிறோம். ஆனால், பின்னர் மன அழுத்தத்திற்கும், சோர்விற்கும் ஆளாகிறோம்.

இயேசு கிறிஸ்து அவளை மென்மையாகத் திருத்தினார்:

**இயேசு அவளுக்கு பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்.** லூக்கா 10:41–42.

மார்த்தாளின் முன்னுரிமைகள் தவறாக இருந்தபடியினால் அவளை சோர்வு ஆட்கொண்டது. 2026–ஆம் ஆண்டில் நாம் ஞானமாக முன்னுரிமைகளைத் தேர்ந்தெடுக்கவும், உண்மையாகவே முக்கியமானதைக் தேர்ந்தெடுக்கவும், அதனால், சோர்வைத் தவிர்க்கவும் கர்த்தர் நமக்கு உதவுவாராக.

## 2. தவறான அடையாளம்!

நமது அடையாளத்தையும், செயலையும் நாம் குழப்பிக்கொள்ளும்போது சோர்வு ஏற்படுகிறது. வேலை நமது மதிப்பாக இருக்கிறது; ஊழியமே நமது அளவுகோலாக இருக்கிறது. நாம் செயல்அட்டவணைகளை நிரப்பி, வெற்றியைத் துரத்துகிறோம். சில சமயங்களில் மற்றவர்களுடன் போட்டியிடுகிறோம். ஆனால், உண்மை என்னவென்றால் நமது மதிப்போ, அளவுகோலோ சாதனைகளிலிருந்து அல்ல, கிறிஸ்துவிடமிருந்து வருகிறது.

நமது அடையாளம் நமது உடைமைகளிலோ, நிலையிலோ அல்லது உலகின் தரங்களிலோ காணப்படாமல், கிறிஸ்துவில் மட்டுமே உள்ளது.

**என் தேவன் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.** பிலிப்பியர் 4:19.

வேலை முக்கியமானதுதான். ஆனால், ஒருபோதும் தேவனுடனான நமது ஐக்கியத்தை விட்டுவிடாதீர்கள். எந்தக் காரணம் கொண்டும் சபைகூடிவருதலையோ அல்லது கிறிஸ்தவ ஐக்கியத்தையோ புறக்கணிக்காதீர்கள்.

மோசே இந்தப் பாடத்தைக் கடினமான முறையில் கற்றுக் கொண்டார். தலைமைத்துவத்தின் தேவைகளால் சோர்வடைந்த அவர், அவருடைய மாமனார் எத்திரோ அவருக்குப் பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்க ஆலோசனை கூறும்வரை அந்த பாரத்தைத் தனியாகச் சுமக்க முயன்றார். (யாத்திராகமம் 18). பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பதும் பயிற்சி அளிப்பதும் மிக முக்கியம். எல்லாவற்றையும் நாமே செய்யும்படி நாம் அழைக்கப்படவில்லை.

அன்பான நண்பர்களே, நாம் ஓடும்படி அவர் அழைத்த ஓட்டத்திற்காக தேவன் நமக்கு கிருபை அளிக்கிறார். நீங்கள் சோர்வாகவோ அல்லது அதிக பாரமாகவோ உணர்ந்தால், ‘இதைச் சுமக்கும்படி தேவன் உண்மையிலேயே என்னிடம் கேட்டாரா?’ என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். நாம் சுமக்க வேண்டும் என்று ஒருபோதும் தேவன் விரும்பாத பாரங்களைத் தனியாகச் சுமப்பதால்தான் சோர்வு ஏற்படுகிறது.

## 3. தவறான சமுதாயம் அல்லது தொடர்பு!

நாம் தனிமையில் வாழ வேண்டும் என்று தேவன் ஒருபோதும் விரும்பவில்லை. ஆரம்பத்திலிருந்தே, அவர் நம்மை தம்முடன் மட்டுமல்லாது, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கவே வடிவமைத்தார். அத்தகைய தொடர்பு துண்டிக்கப்படும்போது, அது பதட்டம், மனச்சோர்வு மற்றும் ஆழமான உணர்ச்சிப் போராட்டங்களுக்கு வழிவகுக்கும்.

சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான நபர்களிடமிருந்து நாம் தனித்து விடப்படுவதினாலே நமக்குச் சோர்வு ஏற்படுகிறது.

**லோத்து யோர்தான் நதிக்கு அருகேயுள்ள நிலம் செழிப்பாகவும் வளமாகவும் காணப்பட்டதால் அதை தான் வாழ்வதற்காக தேர்ந்தெடுத்து சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்** (ஆதியாகமம் 13:10,12). ஆனால்,


## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



“புதுவாழ்வு – உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் **ரூ.1000/– மட்டுமே**



மேலும் விவரங்களுக்கு :

தலைவர், தேசிய வேதாகமக் கல்லூரி

10, முகமது அப்துல்லா 2-வது தெரு,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

கைபேசி: (+91) 98410 71852, 95661 31858

மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக அழைப்பின் எதிரொலி அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## கர்த்தரை நம்பினால் தேவகிருபை சூழ்ந்து கொள்ளும்!

*துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு; கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும். - சங்கீதம் 32:10.*

என் இளமைப் பிராயத்திலிருந்தே சர்வ வல்லவராகிய தேவன் என்னோடு இருப்பதையும், அவர் என்னைக் கொண்டு ஏதோ சில பெரிய காரியங்களைச் செய்யப் போகிறார் என்பதையும் என் வாழ்க்கையில் நான் சந்தித்த நன்மையானதும், கடினமானதுமான அனுபவங்கள் எனக்கு உணர்த்திக் கொண்டே இருந்தன.

சுவிசேஷப் பணியினை மேற்கொள்ளும்படி பலரை நான் ஆதரவுக்குத் தேடிச் சென்றேன். ஆனால், யாரும் வரத்தயாராக இல்லை. எனினும், தேவகிருபை என்னை உந்தித் தள்ளிக் கொண்டேயிருந்தது. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவும், அனுபவமும் இல்லாத காரணத்தால் பாவத்திலும், உலக பாரங்களாலும் நெருக்கப்பட்டு அழிந்து கொண்டிருந்த மக்களுக்கு ஏதாவது செய்து அவர்களை மீட்க வேண்டும் என்ற பெரிய ஆவல் என்னை நெருக்கிக் கொண்டேயிருந்தது.

எனவே, மிகவும் சிரமப்பட்டு 750 ரூபாய் விலைக்கு ஒரு சிறிய அக்கார்டியன் என்ற இசைக்கருவியை வாங்க தேவன் உதவி செய்தார். அதை நான் இசைத்துக் கொண்டு எனக்குத் தெரிந்த ஆவிக்குரிய பாடல்களைப் பாடிக் கொண்டு சென்னையில் நான் தற்போது ஊழியம் செய்யும் சேப்பாக்கம் பகுதியில் உள்ள ஏழை மக்கள் வாழும் பகுதிகளில் சென்று தெருப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தேன். நான் பகல் நேரங்களில் அரசாங்கப் பணியில் ஈடுபட்டிருந்தபடியால், என்னுடன் பணியாற்றிய சகப்பணியாளர்கள் என்னை வியப்புடன் பார்த்தது மட்டுமின்றி, நான் சொல்லிக் கொண்டிருந்த உண்மைகளைக் கேட்கவும் முற்பட்டனர்.

அதிலும் விசேஷமாக, நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் போதே, வீடுகளுக்குள் நீண்ட நாட்களாகப் படுக்கையில் வியாதியாய்ப் படுத்திருந்த சிலர் வெளியே வந்து என் பக்கமாக வந்து நிற்க ஆரம்பித்தனர். அப்படி நிற்கும்போது, தங்களை அறியாமல் மயக்கமுற்று விழவும் அதனைப் பார்த்து பயந்து பலர் ஓடவும் ஆரம்பித்த சம்பவம் எனக்கும் அதிர்ச்சியை உண்டாக்கியது. சில நேரங்களில் இப்படிப்பட்ட மக்களை அக்கால சிறியத் தெரு ஓரத்தில் மீன்களைப் படுக்க வைப்பது போல் வரிசையாகப் படுக்க வைத்திருந்த காட்சியை மறக்க முடியாது. இந்த விஷயங்களில் எனக்கு எவ்வித பயிற்சியும், அனுபவமும் இல்லாதிருந்தபடியால், பல நேரங்களில் செய்வது அறியாமல் திகைத்து நின்றிருக்கிறேன். அந்த நேரத்தில் தேவ ஆவியானவர் என்னைக் கட்டாயப்படுத்தி, அப்படிப்பட்ட மக்கள் மேல் கையை வைத்து மனதுருக்கத்துடன் ஜெபம் பண்ணி ஏவினார். அதற்குக் கீழ்ப்படிந்து, என் கையை வைத்து வியாதியஸ்தருக்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் ஜெபம் பண்ணியபோது, அந்த மக்கள் வியாதியிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலைப் பெற்றார்கள். இந்த ஆரம்பகால அனுபவம் எனக்கு ஊழியத்தில் அதிக உற்சாகத்தையும், தேவன் மேல் அதிக பற்றையும், பாசத்தையும் உருவாக்கியது.

இப்படி முன்னால் சந்திக்கப்பட்ட மக்கள் பிற்காலத்தில் நமது ஆலயத்திற்கு வரவும், இப்போது நமது ஊழியங்களில் அதிக ஈடுபாடு கொள்ளவும் தேவன் வழி செய்துள்ளார். மட்டுமின்றி தொடர்ந்து, என் பிற்கால ஊழியங்களில் பெரிய ஆவிக்குரிய நற்செய்திக் கூட்டங்களை நடத்தவும், அங்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அரிய பெரிய அற்புதங்களை நடத்தவும் தேவன் உதவி செய்தார். பல ஊனமுற்ற மக்களும், வியாதியஸ்தர்களும், மட்டுமின்றி நீண்டகால பிசாசின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த மக்கள் பலரும் விடுதலை பெற தேவன் என்னை பயன்படுத்தி வருகிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்புகூட சென்னையை அடுத்த காஞ்சிபுரம் என்ற இடத்திற்குட்பட்ட சில கிராமங்களில் சென்று இவ்வித வெளிக்கூட்டங்களை நடத்தவும், அந்த கிராமங்களை சுவிசேஷமயமாக்கவும் தேவன் இரக்கம் பாராட்டினார். தேவன் என்னை பயன்படுத்திய சிறு சிறு இடங்களை நான் மறவாமல் அதே ஊழியங்களை இந்த நாட்களிலும் செய்யும்படி வாய்ப்புகளை நல்கி வருகிறார். அவருடைய நாமத்துக்கே மகிமை உண்டாவதாக!

*************

**அவன் கவனிக்கத் தவறியது அங்குள்ள மக்களின் பொல்லாப்புதான்** (ஆதியாகமம் 13:13). தவறான சமுதாயத்தைத் தேர்ந்தெடுத்த அவனது முடிவு பேரழிவுக்கு வித்திட்டது; இழப்பு, மனவேதனை மற்றும் உடைந்த உறவுகள் போன்ற விளைவுகளுக்கு வழிவகுத்தது.

தனித்துக் காணப்படாமல் உங்கள் திருச்சபைக் குடும்பத்துடன் இணைந்திருங்கள். விசுவாசத்தை பெலப்படுத்தும் உறவுகளை உருவாக்குங்கள். புறங்கூறுவதைத் தவிர்த்து, தேவனைப் பற்றிப் பேசுங்கள்.

சோர்வு ஒரு பாவமா ?

சோர்வாக உணர்வது ஒரு பாவம் அல்ல. எலியா கூட, ஒரு பெரிய வெற்றிக்குப் பிறகு, சோர்வடைந்து, ... **போதும் கர்த்தாவே** ... என்று 1 இராஜாக்கள் 19:4–ல் கதறினான்.

தேவன் எலியாவைக் கண்டிக்கவில்லை. மாறாக, அவனைத் தேற்றினார்; அவனுக்கு உணவளித்தார்; அவன் ஓய்வெடுக்க அனுமதித்தார்.

இன்றும் தேவன் நம்மிடம் அதையே கூறுகிறார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்**. மத்தேயு 11:28.

அவருடைய பாதத்தில் அமருங்கள். அவருடைய பிரசன்னத்தில் இளைப்பாறுங்கள். அவர் உங்கள் பெலத்தைப் புதுப்பிப்பார்.

தேவனுடைய இளைப்பாறுதல் வாக்குறுதி: ... **என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்** ... யாத்திராகமம் 33:14.

**... என்னிடத்தில் வாருங்கள் ... என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது**... என்று மத்தேயு 11:28, 30 ல் இயேசு கிறிஸ்து உண்மையான இளைப்பாறுதலை வாக்களிக்கிறார்:

## பேதுருவின் நினைவூட்டல்!

மேலும், ... **உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்**; ஏனென்றால், அவர் உங்கள்மேல் அக்கறையுள்ளவராயிருக்கிறார்" என்று பேதுரு நமக்கு நினைவூட்டுகிறார். 1 பேதுரு 5:7 'வைத்துவிடுங்கள்' என்ற வார்த்தை எனக்குப் பிடித்திருக்கிறது. ஏனென்றால், அதன் அர்த்தம் 'இறக்கி வைத்தல்', 'அதை நீங்களே சுமப்பதை நிறுத்துவது' என்பதாகும்.




மேலும் ... **"நீங்கள் தனித்து ஒரு அமைதியான இடத்திற்கு வந்து சற்று இளைப்பாறுங்கள்" என்று இயேசு கிறிஸ்து அன்புடன் நம்மை மீண்டும் அழைக்கிறார்.** (மாற்கு 6:31).

சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, நமக்காக சிலுவையில் மரித்து, மீண்டும் உயிர்த்தெழுந்தார். அதனால் நாம் சமாதானத்தில் வாழ்ந்து அவருடைய இளைப்பாறுதலை அனுபவிக்க முடியும். இன்றும் நாம் அவரை நம்பலாம்.

## ஒரு நிறைவான நினைவூட்டல்!

1. *பாவ சஞ்சலத்தை நீக்க பிராண நண்பர் தான் உண்டே*

   *பாவ பாரம் தீர்ந்து போக மீட்பர் பாதம் தஞ்சமே*

   *சால துக்க துன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால்*

   *துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்.*

2. *கஷ்ட நஷ்டம் உண்டானாலும் இயேசுவண்டை சேருவோம்*

   *மோச நாசம் நேரிட்டாலும் ஜெபதூபம் காட்டுவோம்.*

   *நீக்குவாரே நெஞ்சின் நோவை பெலவீனம் தாங்குவார்*

   *நீக்குவாரே மனச்சோர்வை தீய குணம் மாற்றுவார்!*

**... என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் ...** யாத்திராகமம் 33:14.

தேவனுடைய பிரசன்னம் உங்களுக்கு முன்பாகச் செல்லட்டும். உங்களுக்கு இளைப்பாறுதல் அளிக்க.



**இயேசு கிறிஸ்துவை நம்புங்கள்!**

**எல்லாவற்றையும் தேவனிடம் கொண்டு செல்லுங்கள்!**

**அவருடன் பேசுங்கள்!**

**அவர் இலவசமாகக் கொடுக்கும் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளுங்கள்!**

*************

### ஓர் நற்செய்தி!

சென்னை- 100, மேடவாக்கத்தில் உள்ள நம் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** வளாகத்தில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம் சனிக்கிழமை தோறும் மாலை 5.00 மணிக்கு நடைபெறுகிறது. இதில் கலந்து கொண்டு எங்களுடன் ஜெபிக்க வாருங்கள்.

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்,** *98412 71858*

### அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– ஆசிரியர்**

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |

SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ **வருட சந்தா ரூ. 100/–** ☆ **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல் (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th FEBRUARY 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers**, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**